AZHADHINDHA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

## சுருக்கம்

கூட்டுறவு – பழங்குடியினர் நலம் – பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான பங்குத்தொகை மானியம் மற்றும் வட்டி மானியம் ரூ.90 இலட்சம் – வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிபி2) துறை

அரசாணை (3ப) எண்.09 நாள்: 20.12.2021
ஸ்ரீபிலவ வருடம், மார்கழி 5,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்க:

1. அரசாணை (3ப) எண்.09, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிபி2) துறை, நாள் 06.11.2020.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (முழு கூடுதல் பொறுப்பு) கடித ந.க.எண்.50149/ 2020/ சிஎம் 4, நாள் 22.03.2021 மற்றும் 15.09.2021.

---

ஆணை:–

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2019–2020–ஆம் ஆண்டிற்கான வட்டியில்லாக் கடன்களாக ரூ.90 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதத்தில், 2019–2020–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில், பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் பகுதியில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும், 22 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 31.03.2021 முடிய 1,19,656 பழங்குடியினரும், 8,986 பழங்குடியினரல்லாதோரும் ஆக மொத்தம் 1,28,624 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்றும், 2019–2020–ஆம் ஆண்டு பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் 70,358 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர் என்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார். எனவே, பழங்குடியின உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பங்குத்தொகை மானியம் மற்றும் அவர்களால் பெறப்படும் மத்தியக் காலக்கடன் மற்றும் சுயஉதவிக்குழுக்கடன்களின் வட்டிச்சுமையை குறைக்க வட்டிமானியம் ஆகியவற்றிற்கென நிதியுதவி பெறுவது அவசியமாகிறது என்றும், 2020–2021–ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ், மானியம் பெறுவது குறித்த

(த.பி.பா)

முன்மொழிவுகள், சம்பந்தப்பட்ட மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களால் பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது அறிக்கையில், இத்திட்டத்தின் கீழ், இதுவரை அரசால் வழங்கப்பட்ட பங்குத் தொகை மானியத்தால் பயன்பெறாமல் உள்ள பழங்குடியின உறுப்பினர்களின் எண்ணிக்கையை சரியாக கணக்கிட்டு, அவர்களில், பங்குத்தொகை உதவி தேவையுள்ள தகுதியான உறுப்பிஙர்களை இனங்கண்டு, அவ்வுறுப்பினர்களுக்கு மட்டும் தலா ரூ.1000/- வீதம் பங்குத்தொகை மானியமாக மண்டல இணைப்பதிவாளர்களால் அளிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், 9622 உறுப்பினர்களுக்கு தலா ரூ.1000 வீதம் என மொத்தம் ரூ.96,22,000/- பங்கு தொகை மானியமாக பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்க மண்டல இணைப்பதிவாளர்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

4. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மேலும் தனது அறிக்கையில், மண்டல இணைப்பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் மூலம் 2020-2021-ஆம் ஆண்டில் ரூ.119.05 இலட்சம் சுயஉதவிக்குழுக்கடனுக்கான வட்டி மானியமாகவும், ரூ.182.27 இலட்சம் மத்தியக் காலக் கடனுக்கான வட்டி மானியமாகவும் அளித்திட கோரிக்கைகள் பெறப்பட்டன என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

5. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது அறிக்கையில் 2020-2021-ஆம் ஆண்டு பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்காக் பங்குத் தொகை மானியம் மற்றும் வட்டி மானியம் பின்வரும் விவரப்படி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்:-

| வ.எண். | திட்டத்தின் பெயர் | கோரும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பங்குத் தொகை மானியம் | 96.22 |
| 2. | மத்தியக்காலக் கடனுக்கு வட்டி மானியம் | 182.27 |
| 3. | சுய உதவிக் குழுக் கடனுக்கு வட்டி மானியம் | 119.05 |
| | மொத்தம் | 397.54 |

(த.பி.பா)

எனவே, மேற்கண்ட ரூ.397.54 இலட்சம் தொகையில் இத்திட்டத்தின் கீழ் ரூ.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும் என எதிர்ப்பார்க்கப்படும் நிலையில், எஞ்சிய ரூ.307.54 இலட்சத்தினை 2020–2021–ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் பங்குத்தொகை மற்றும் வட்டி ஆகியவற்றிற்கு மானியமாக வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை ஏற்று, 2020–2021–ஆம் ஆண்டு பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்காக பங்குத் தொகை மானியம் மற்றும் வட்டி மானியமாக ரூ.90.00 இலட்சத்தினை (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) முதற்கட்டமாக வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி–6 ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2425–00–கூட்டுறவு –796 –பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JA – பழங்குடியினர் பகுதிகளில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவி – 311 – மானியங்கள் – 02 பொதுவான மானியம்.

(DPC: 2425 00 796 JA 31102)

8. மாநில தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் சம்மந்தப்பட்ட மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலே பத்தி–6ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.90.00 இலட்சம் (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) சம்பள கணக்கு அலுவலரிடமிருந்து (தெற்கு) பெற்று வழங்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.56835/நிதி(கூ.உ(ம)நு.பா)/2021, நாள்: 15.12.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்
அரசுகூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.

(த.பி.பா)

மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்/ நாமக்கல்/ திருச்சி/ தருமபுரி/ வேலூர் / திருவண்ணாமலை / விழுப்புரம் / ஈரோடு / நீலகிரி (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10 மூலமாக)
மண்டல இணைப்பதிவாளர், சேலம்/ நாமக்கல்/ திருச்சி/ தருமபுரி/ வேலூர் / திருவண்ணாமலை / விழுப்புரம் / ஈரோடு / நீலகிரி (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10 மூலமாக)
மேலாண்மை இயக்குநர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சேலம்/ நாமக்கல்/ திருச்சி/ தருமபுரி/ வேலூர்/ திருவண்ணாமலை / விழுப்புரம் / ஈரோடு / நீலகிரி (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10 மூலமாக)
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
நிதி (கூ.உ.(ம) நு.பா/வரவு செலவு–I/ வரவு செலவு–II) துறை, சென்னை–9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. [signature]
20/12/2021
பிரிவு அலுவலர்.
[signature]
20.12.2021